# நம்மைத் தேடி வந்த இயேசு



நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்
யோவான் 10:10

அன்பானவர்களே

வாழ்த்துக்கள்!

நீங்கள் காட்டும் எல்லா ஆதரவிற்காகவும் அன்பிற்காகவும் நன்றி.

இன்னுமொரு கிறிஸ்மஸ் பண்டிகை காலம் களைகட்ட ஆரம்பித்துவிட்டது. கிறிஸ்து பிறப்பின் உண்மைகளை மறைத்து விகாரப்படுத்தும் காட்சிகளை ஆங்காங்கு காண்கிறோம். நாம் உண்மையை விட்டு விலகாதபடி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

மனிதன் உயிரூட்டத்துடன் வாழவேண்டும். அந்த வாழ்வில் அவன் நிறைவைக் காண வேண்டும். வாழ்க்கைச்சூழலில் சிக்குண்ட மனிதன் இவ்விரண்டையும் இழந்து வெறுப்பிலும் சலிப்பிலும் வேதனையிலும் தோல்வியிலும் கவலையிலும் கண்ணீரிலும் வெறுமையிலும் ஏமாற்றத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

தேவன் தந்த அந்த நிறைவான மகிமையான வாழ்வுக்கு தடையாயிருப்பது தேவனுக்கு விரோதமாக அவன் செய்த பாவம்.

“எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானார்கள்” ரோமர் 3:23

மனிதன் இழந்துபோன அந்த மகிமையான வாழ்வை அவனுக்கு மீட்டுத்தரும்படியாய் இயேசு இந்த உலகில் வந்தார்.

“அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாய் இருந்தது” யோவான் 1:4
நம் ஜீவனை மீட்பதற்காக தம்முடைய ஜீவனையே சிலுவையில் தந்தார், உயிர்த்தெழுந்தார். நாம் அவரை நம்பும்போது கிறிஸ்துவுக்குள் நமக்கு உயிரூட்டமும், நிறைவும் கிடைக்கும்

இதுதான் கிறிஸ்து பிறப்பின் உண்மை. இதை கொண்டாடும் வண்ணம் அங் மோ கியோ மெதடிஸ்ட் திருச்சபையின் சார்பில் கீழ்க்கண்ட தேதிகளில் சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருக்கிறோம்.

இக்கொண்டாட்டங்களில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

வாருங்கள்! இயேசு தரும் நிறைவை பெற்றுக்கொள்ளுங்கள்

இப்படிக்கு

போதகர். பிரபு

| | | |
|---|---|---|
| கிறிஸ்மஸ் கீத ஆராதனை | 8 டிசம்பர் 2013 | ஞாயிறு காலை 9:45 மணிக்கு |
| கிறிஸ்மஸ் கரோலிங் | 23 டிசம்பர் 2013 | திங்கள் மாலை 7:30 தொடக்கம் இல்லங்களுக்கு வருகை |
| கிறிஸ்மஸ் ஆராதனை | 25 டிசம்பர் 2013 | புதன் காலை 10 மணிக்கு |
| விழிப்பு இரவு ஆராதனை | 31 டிசம்பர் 2013 | செவ்வாய் இரவு 10:30 மணிக்கு |
| புது வருட ஆராதனை | 1 ஜனவரி 2014 | புதன் காலை 10 மணிக்கு |



உக்கிரான குழுத் தலைவர்களாகிய நாங்கள் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும்

இனிய கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு 2014 வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

சபையின் முக்கிய நிகழ்ச்சிகள்

| நிகழ்ச்சிகள் | நேரம் |
|---|---|
| காலை ஆராதனை | ஞாயிறு தோறும் காலை 9:45மணிக்கு |
| ஞாயிறு பள்ளி | ஞாயிறு தோறும் காலை 11:45மணிக்கு |
| வேத ஆராய்ச்சி – வாலிபர் | ஞாயிறு தோறும் காலை 11:45மணிக்கு |
| வேத ஆராய்ச்சி – பெரியோர் | ஞாயிறு தோறும் காலை 11:45மணிக்கு |
| சுவிசேஷ பணியின் இந்திய சகோதரர் ஐக்கியத்தின் ஆங்கில வகுப்பு | ஞாயிறு தோறும் மாலை 7:00மணிக்கு |
| சுவிசேஷ பணியின் கிட்டார் வகுப்புகள் | சனி தோறும் மாலை 4:00 மணிக்கு |
| ஜெபக் குழு – அங் மோ கியோ | வெள்ளி தோறும் மாலை 8:00 மணிக்கு |
| ஜெபக் குழு – ஹவ்காங் செங்காங் பாசிரீஸ் | வெள்ளி மாலை 7:30 மணிக்கு (மாதம் ஒரு முறை) |

மேலும் விபரங்கள் அறிய நம் போதகரை தொடர்புக் கொள்ளுங்கள் (98362284)

# Jesus came to seek us



"I have come that they may have life, and have it to the full." John 10:10

Dear Friends

I greet you all in our Lord's Glorious Name!

This letter comes to you with my sincere thanks for all your love and support through out this year.

Another season of Christmas is around. Preparations are in full force to celebrate Christmas with much grandeur. In many of the decorations and commercial ads around Singapore, we notice that the TRUTH about Christmas is deliberately distorted. Human Fantasies and weird imaginations appear to be so real. Let us be cautioned that we may not be distracted from the truth. I want us to remain faithful to the Historic Faith that we have.

Man has to live with vitality and need to find fulfilment in life. But sadly man is caught up in life's pursuits and lost both vitality and fulfilment. As a result he lives with hatred, frustration, failure, worry, emptiness and tears. Sin hinders man from enjoying that abundant life God has intended for him. "For all have sinned and fall short of the glory of God." Romans 3:23
Jesus Christ came into this world to redeem him back to His purposes.

"In him was life, and that life was the light of all mankind." John 1:4. He gave Himself on the cross of Calvary. He rose again on the third day. When we trust Him we will experience that vitality and fulfilment.

This is the basic truth of Christmas. As a church we celebrate this truth during this season. Following are the programs planned for this season.

We invite you to join us during these events and enjoy the blessings of God! Please bring your friends along.

Sincerely,

**Pastor. Prabhu**

| | | |
|---|---|---|
| **Christmas Carol Service** | **8th December 2013** | **Sunday Morning at 9:45am** |
| **Christmas Caroling** | **23rd December 2013** | **Monday Evening 7:30pm onwards house visiting** |
| **Christmas Worship Service** | **25th December 2013** | **Wednesday Morning at 10am** |
| **Watch Night Service** | **31st December 2013** | **Tuesday Night at 10:30pm** |
| **New Year Service** | **1st January 2014** | **Wednesday Morning at 10am** |



We the Local Church Executive Committee (LCEC) members jointly extend our wishes to you and your family a

## Merry Christmas and a Blessed New Year 2014

<u>Church Special Events</u>

| Programs | Time |
|---|---|
| Morning Worship Service | Sunday Morning at 9:45am |
| Sunday School | Sunday Morning at 11:45am |
| Bible Study – Youths | Sunday Morning at 11:45am |
| Bible Study – Adults | Sunday Morning at 11:45am |
| Evangelism – FIB English class | Sunday Evening at 7:00pm |
| Evangelism – Guitar Class | Saturday Evening at 4:00pm |
| Cell group - Ang Mo Kio | Friday Evening at 8:00pm |
| Cell group – Hougang, Sengkang and Pasir Ris | Friday Evening at 7:30pm (monthly once) |

For more details contact our Pastor (98362284)